1967 ஜூன் 20]

விவரம் சேகரித்து அறிக்கை தருவார்கள். அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று யோசிக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தலைவர் அவர்களே, மோட்டாரில் போகும்போது கோழிப் பண்ணைகளைப் பார்த்தால் சில கட்டடங்கள், டில்லியில் உள்ள அசோகா ஹோட்டல் மாதிரித் தெரிகின்றன. ஏர்கண்டிஷன் செய்த இடங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏர் கண்டிஷன் செய்த இடங்களும் உண்டு—செங்கற்பட்டு மாவட்டத்தில் அதிகம்.

Cinema Industry

* 40 Q.—THIRU K. VINAYAKAM : THIRU MUNU. ADHI : } Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state :

(*a*) whether there is any proposal to nationalise cinema industry in the State of Madras; and

(*b*) if so, in what stages?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது இல்லை.

(b) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : பொதுவாக இந்த சினிமா தொழிலில் இருப்பவர்கள் அதிகமான பணத்தைக் கொடுத்து, அதிகமான பணத்தையும் வாங்கி, அவைகளைப்பற்றியெல்லாம் சரிவர கணக்கு வைக்காமல் அரசாங்கத்தையும் ஏமாற்றி, மற்றும் இப்பேர்ப்பட்ட தகராறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு, இப்பேர்ப்பட்ட நல்ல தொழில்—அதிலும் சினிமா தொழிலில் வருகிற வருவாய் ஏராளமாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்—அரசாங்கமே எடுத்து நடத்தினால் இப்பேர்ப்பட்ட சிக்கல்களுக்கு இடம் இல்லாமல் இருப்பதோடுகூட, மற்றும் அரசாங்கத்திற்கு அதிக லாபம் வரும் என்று கருதப்படுவதால் இதுபற்றி அரசு பரிசீலித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சினிமாத் தொழிலைத் தேசியமயமாக்க வேண்டும் என்று நாங்கள் சொன்னதாகக் கருதிக்கொண்டு பேசுகிறார்கள். சினிமாக் கொட்டகைகளை தேசீயமயமாக்கவேண்டும் என்பது தான் நாங்கள் சொல்லியிருப்பது. சினிமாத் தொழிலையே தேசீயமயமாக்கலாமா என்றால், சினிமாத் தொழில் என்பது இரண்டு பகுதி ஒன்று ஸ்டூடியோ வைப்பது. இன்னொன்று சினிமாவில் நடிப்பது. கனம் உறுப்பினர் அவர்கள் அதற்கு வரமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், அப்படி அவரும் நானும் நடித்துப் படமெடுத்து சர்க்காருடைய கணக்கில் நஷ்டத்தை எழுதுவதில் எந்த

விதமான பயனுமில்லை. ஸ்டூடியோ வைக்கலாம் என்பது நல்ல உருப்படியான யோசனை. நான் வெகு தீவிரமாக அதைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன். எண்ணிக் கொண்டிருக்கிறேன் என்றால், ஆகஸ்டில் வருமா, செப்டம்பரில் வருமா என்று எண்ணத் தேவையில்லை. இன்னொரு மாநிலத்தில் சினிமா ஸ்டூடியோ ஒன்றை மாநில சர்க்கார் அமைத்திருக்கிறார்கள். அது நடைமுறையில் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்குப் பிறகு நாம் அதை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதை ஒத்துக்கொண்ட பிறகு, மறுபடியும் கனம் உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தைத் திருத்த விரும்புகிறேன். நாங்கள் சினிமாத் தொழிலைத் தேசியமயமாக்கவேண்டுமென்று சொல்லவில்லை, சினிமாக் கொட்டகைகளை மட்டும்தான்.

திரு. கே. போஜன் : அவைத் தலைவர் அவர்களே, பூனாவில் சினிமாத் தொழிலை படிப்பதற்காக ஒரு கலைக்கல்லூரி வைத்திருக்கிறார்கள். அதைப் போல் சினிமாத் தொழிலை கற்றுக்கொள்ள நம்முடைய மாகாணத்திலும் ஒரு கல்லூரி நிறுவும் யோசனை நம்முடைய அமைச்சரவைக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதைப்பற்றி தனிப்பட்ட முறையிலே எனக்குக் கருத்து வேற்றுமை உண்டு. நடிப்பு, பள்ளிக்கூடத்தில் வகுப்பு அறையில் சொல்லிக்கொடுக்க கூடியதல்ல. நாடக அமைப்பு மூலம் தான் சினிமாத் தொழிலுக்குத் தேவையான நடிப்பைப் பெறமுடியும். அப்படிப்பட்ட நல்ல நாடகக் கம்பெனிகள் நாளுக்கு நாள் நலிந்து வருகின்றன. நாடகங்களில் நடிப்பதன் மூலம் நல்ல நடிப்புத் தன்மை கிடைப்பதற்கு வழி உண்டு. அது வகுப்பு அறையில் வைத்துச் சொல்லிக் கொடுக்கக் கூடியதல்ல. வகுப்பு அறையில் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றால், சிலப்பதிகாரத்தில் அதைப்பற்றி வெகு விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. தமிழாசிரியர்களே அதைப்பற்றி சொல்லிக்கொடுத்து விடலாம்.

• 41 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state :

(*a*) whether there is any proposal to nationalise the cinema theatres and public entertainment houses ; and

(*b*) if so, in what stages?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இப்பொழுது இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : சினிமாத் தொழிலை தேசியமயமாக்க முடியாது என்று முதல் அமைச்சர் அவர்கள் நினைத்தாலும்கூட, சினிமாக் கொட்டகைகள், அதோடு சேர்ந்த டூரிங் சினிமாக்கள் என்று சொல்லப்படுகிறதே அவைகளையெல்லாம் அரசாங்கம்